Registered as a Newspaper in Ceylon    விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily

மலர் 9
இதழ் 225
தேசிய தினசரி

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 8 ஜ. ஆகிர் 19 ஞாயிற்றுக்கிழமை [24-9-7]

# வாங்கிய கடனை செலுத்த தவறினால் இலவச அரிசி இல்லை

## விவசாயிகளுக்கு இப்படி ஓர் எச்சரிக்கை

கொழும்பு, சனி

விவசாயத்துக்கென கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கடன்களைப்பெற்று உரிய தவணைகளில் கடனைத் திருப்பிக் கொடுக்காத விவசாயிகளுக்கு இலவசமாக கூப்பன் அரிசி வழங்குவது நிறுத்தப் படலாமென அறியப்படுகிறது.

கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாக கடன் உதவிகளைப் பெற்றுவரும் விவசாயிகள் அதனைத் திருப்பிக்கொடுப்பதில் அசிரத்தை காட்டுவதாகவும் பெற்ற கடனுக்குரிய வேலை செய்வதில்லையெனவும் தெரிவிக்கப்பட்ட புகாரைத் தொடர்ந்தே இவ்வித நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

'கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விவசாயத்துக்குக் கடன் கொடுக்கும் அரசாங்கம் அந்நிய கடன்களைப்பற்றிப்பேசாது தற்சமயம் விவசாயிகளைக் கடன் எடுங்கள் என்று சொல்வதால் எதிர்காலத்தில் கூட்டுறவு இயக்கங்கள் எப்படி ஆகுமோ என்ற பயம் ஏற்படுகிறது' என இளைப்பாறிய கூட்டுறவு சிரேஷ்ட ஆணையாளர் திரு. ஆர். சி. எஸ் கூக் சில நாட்களுக்கு முன் எடுத்துக் கூறியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடன்களை ஒழுங்காகத் திருப்பிக்கொடுக்காததால் கூட்டுறவு இயக்கங்கள் தொடர்ந்து சீராக இயங்க முடியாதநிலை ஏற்படலாமென்ற அச்சம் காரணமாகவே இவ்விதம் எச்சரிக்கை செய்யவேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

பலர் எடுத்த கடன்களைத் திருப்பிக்கொடுக்காததால் இவ்வித கடும்நடவடிக்கை எடுக்கவேண்டியிருப்பதாக உணவு அமைச்சைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## யாழ். செயலகத்தைசுற்றி திருடர்கள் வலம்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் செயலகத்தைச் சுற்றி நள்ளிரவு நேரங்களில் சைக்கிள் திருடர்கள் நடமாடுவதாகத் தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 11-45 மணியளவில் சந்தேகத்துக்கிடமான முறையில் இரு திருடர்கள் 3 முறை யாழ் செயலகத்தை வலம்வந்ததாகவும் ஒரு இடத்தில் அவர்கள் தமது சைக்கிளை விட்டு இறங்கிய பொழுது செயலக காவலாளி ஒருவர் 'ரோர்ச்லைட்' அடித்துப் பார்த்த போது அவர்களில் ஒருவர் ஒரு ஸ்குறூட்றைவரையும் ஒரு மரம் துளைக்கும் கருவியையும் கையில் வைத்திருந்ததாகவும் 'ரோச்லைட்' அடித்துப் பார்த்த போது அவர்கள் அவற்றைக கிழே போட்டு விட்டு ஓட்டம்பிடித்ததாகவும் அக் காவலாளி கச்சேரி திறைசேரிப் பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த பொலிசாரிடம் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

இப் பொருட்களை இப்போது பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இதுசம்பந்தமாக சந்தேகநபர்களை தேடும் முயற்சியில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## புதிய முத்திரைகள்

உடுப்பிட்டி, சனி

இலங்கைச் சாரணச் சிறுமியர் குழுவின் பொன்விழாவைக் குறிக்கும் முகமாக விசேஷ 3 சத, 25 சதமுத்திரைகள் இம்மாதம் 19-ம் திகதி வெளியிடப்பட்டது. இவ் விசேஷ முத்திரைகள் அடுத்த வருடம் பெப்ரவரி மாத முற்பகுதியிலேயே விற்பனைசெய்யப்படும் என அறியப்படுகிறது.

எம். ஜி. ஆர். — எம். ஆர். ராதா வழக்கு

## 'சாதாரண வேகத்திலேயே ராதா தோட்டாக்கள் பாய்ந்தன

### எம். ஜி. ஆரை, ராதா சுட்டதாக இன்ஸ்பெக்டர் ஜெனரல் கூறவில்லை'

### துப்பாக்கி நிபுணர் சாட்சியம்

சென்னை, செப். 23

'ராதாவின் துப்பாக்கியிலிருந்து தோட்டா சாதாரண வேகத்துக்கும் இலோசான வேகத்துக்குமிடையிலேயே வெளிச்சென்றிருக்க வேண்டும். தோட்டாக்கள் வேகமாகச் செல்வதற்காக தோட்டாக்களுக்கு எண்ணை விடுவதுபற்றி துப்பாக்கி நிபுணர் எவரும் யோசனை கூறியுள்ளதாக எனக்குத் தெரியாது' என துப்பாக்கி ஆயுதங்கள் நிபுணரான திரு. ஏ. வி. சுப்பிரமணியம் எம்.ஜி.ஆர்.-எம்.ஆர். ராதா வழக்கு சென்னை விசேஷ செஷன்ஸ் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. பி. லக்ஷ்மணன் முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்ட போது சாட்சியமளிக்கையில் கூறினர்.

ராதா தரப்பு வழக்கறிஞர்களில் ஒருவரான திரு நடராஜனுல் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதே திரு. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதிய அனுபவமும், ஆராய்வுத்திறமையும் இல்லாததாலேயே சம்பவத்தின் போது உபயோகிக்கப்பட்ட தோட்டாக்கள் ராதாவுடையவை என்றும் எம். ஜி. ஆருடையவையல்ல என்றும் கூறுவதாக வழக்கறிஞர் திரு. நடராஜன் வாதித்த போது திரு. சுப்பிரமணியம் மறுப்புத்தெரிவித்தார்.

வழக்கறிஞரில மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் ஒரு துப்பாக்கி பாவிப்பு காரணமாக உருவ அமைப்பில் மாற்றம் காணலாம் என்றும் ஒரு கம்பனியில் தயாராகும் துப்பாக்கிகள் காலப்போக்கில் சில மாற்றங்களுக்குள்ளாகிவிடும் என்றும் தெரிவித்தார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அருள் ஜனவரி 13-ம் தேதி [சம்பவம் நடந்த தினத்தன்று மறுநாள்] ராதா-[illegible] சுட்டுவிட்டதாக பத்திரிகைகளுக்குத் தெரிவிக்கப்படுவது குறித்து தமக்கு ஒன்றும் தெரியாது என மறுத்த திரு. சுப்பிரமணியம் ஐ. ஜி. பியை தாஜா பண்ணுவதற்காகவே தாம் அவ்விதம் கூறுவதாக வழக்கறிஞர் தெரிவிப்பதை தாம் மறுப்பதாகவும் தெரிவித்தார்.

விசாரணையின்போது திரு. சுப்பிரமணியம் மேலும் கூறியதாவது:-

எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஆர். ராதா இருவரின் ரிவால்வர்களும் ஒரே சமயத்தில் இரண்டு வேலைகளைச் செய்யும் ரிவால்வர்களாகும்.

எம். ஜி. ஆரின் ரிவால்வரின் தோட்டாக்களில் அமெரிக்க மார்க்குகள் காணப்படுகின்றன. இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றத்தோட்டாக்களில் மேற்சொன்ன மார்க்குகள் இல்லை. அவைகள் எங்கு உண்மையில் உற்பத்திசெய்யப்பட்டவை என்பதை உறுதியாகச் சொல்லமுடியாது.

## வவுனியா கிராமங்களுக்கு புதுப் பெயர்கள்

வவுனியா, சனி

வவுனியாவிலுள்ள கிராமங்களுக்குப் புதுப் பெயர் வைப்பதுபற்றியும் வைக்கப்படவுள்ள பெயர்கள் பற்றி மாவட்ட இணைப்புக் குழுவுக்கு அறிவிக்கும்படியும் வவுனியா கச்சேரியில் நடைபெற்ற மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா அரசாங்க அதிபர் திரு. பி. சி. பெரேரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சுமார் 52 உத்தியோகத்தர்களும் பிரதிநிதிகளும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் சமுகமளித்திருந்தனர்.

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. கே. நல்லநாதன் காரியாதிகாரிகளின் பிரிவுகளுக்கேற்றபடி கிராமச்சபைகளின் எல்லைகள் நிர்ணயிப்பதில் பலகஷ்டங்கள் இருப்பதாகவும் அது விரைவில் செய்யமுடியாதவொரு காரியமெனவும் கூறினர்.

வவுனியாவில் உள்ள கள்ளுத்தவறணைகள் வேறு இடத்துக்கு மாற்றப்பட வேண்டும் என்றும் பாடசாலைகளுக்கு அருகே உள்ள மரங்களில் கள்ளு இறக்கத் தடை விதிப்பதெனவும் 250 யார் தூரத்துக்கப்பால் தான் கள்ளு இறக்க உத்தரவு கொடுக்கவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

முறுகண்டியில் டிஸ்பென்சரி ஒன்று கட்டப்பட வேண்டுமெனவும் அதற்கு ஏற்ற இடம் நிர்ணயிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன் வவுனியா நகரத்துக்கு நகர பஸ்சேவை ஆரம்பிக்கப்படவேண்டுமெனவும்தீர்மானிக்கப்பட்டன.

### வீடுகள் திருத்தப்படும்

புயலால் பாதிக்கப்பட்டு இருக்க இடம் இன்றி இருக்கும் பாவற்குளம் மக்களின் வீடுகள் சகலதும் உடன் திருத்தி அவர்கட்கு நிவாரணம் அளிக்கவேண்டும் என்று வவுனியா எம். பி. திரு ரி. சிவசிதம்பரம் கேட்டுக்கொண்டதற்கு இந்நிதியாண்டு முடியுமுன் அவர்களின் வீடுகளை திருத்திக்கொடுப்பதாக வவுனியா அரசாங்க அதிபர் உறுதி தெரிவித்தார்.

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரையும் அவர் ஒரு பெரிய ஆத்மா என்ற உணர்வுடன் நடத்துங்கள். குற்றங் குறைகள் அவர்களிடம் இருந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளாதீர்கள்.

—மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க௵ புரட்டாதி ௴ 8௳ (24-9-67)

## கூட்டு நடவடிக்கை

தேயிலை விலை வீழ்ச்சியைத் தடுப்பதற்கு இந்தியாவும் இலங்கையும் கூட்டாக நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் இந்த அடிப்படையில் இரு நாடுகளுக்கிடையிலும் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. இந்த நல்ல யோசனை இப்போதாவது செயல்பட்டால் இருநாடுகளுக்குமே நன்மைதரும்.

தேயிலை ஏல விற்பனையில் சில வெளிநாட்டவர் கட்டுமே ஆதிக்கம் கொண்டிருப்பதால் தேயிலையின் விலையை நிர்ணயிக்கும் 'பிடி' அவர்கள் கையிலேயே இருந்து வருகிறது. மலேசியாவிலும் ரப்பர் விற்பனையிலும் இதுபோன்று தான் 'அந்நியர்' சிலர் ஏகபோகம் செலுத்திவந்தனர். நிலைமைமோசமானதைத் தொடர்ந்து மலேசிய அரசாங்கமும் ஏல விற்பனையில் இறங்கியது. இதைத் தொடர்ந்து ரப்பர்விலை சிறிது அதிகரித்தது. இங்கும் தேயிலை ஏல விற்பனையில் இலங்கை அரசாங்கமும் ஈடுபடவேண்டுமென்று யோசனை தெரிவிக்கப்பட்ட போதிலும் அதுசெயல்படவில்லை. இலங்கைத் தேயிலைக்கு உலக சந்தையில் இந்தியத் தேயிலையிலும் போட்டியாக வந்துள்ளதென்று கூறப்பட்டது. ஆனால் சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர், தேயிலை வர்த்தகத்தில் இலங்கையின் நலனைப்பாதிக்கக்கூடிய வகையில் இந்தியா தேயிலையை உற்பத்தி செய்யவில்லையென தெரிவித்திருந்தார். ஆயினும் தேயிலையின் விலையை நிர்ணயிக்கும் உரிமை தேயிலையை வாங்கும் ஒரு சில வெளிநாட்டவரின் கையில் விடமுடியாதென்பதையும் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளிடமே அந்த உரிமை இருக்க வேண்டுமென்பதையும் இலங்கையும் இந்தியாவும் உணர்ந்துகொண்டுள்ளன. தேயிலை வர்த்தகம் சம்பந்தமாக இருநாட்டு அதிகாரிகளும் நிபுணர்களும் பரிசீலனை செய்துவருகின்றனர். விரைவில் இருநாடுகளும் கூட்டாக நடவடிக்கை எடுப்பதற்கான ஓர் ஒப்பந்தத்தை உருவாக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது இருநாடுகளுக்கிடையிலும் வர்த்தகம், பொருளாதாரம் ஆகியவைகளில் மேலும் நெருங்கிய ஒத்துழைப்புக்கு வழிவகுக்குமென நம்பலாம்.

இதேசமயம் ஆசியாவிலுள்ள ரப்பர் உற்பத்தி நாடுகள் ரப்பர் வர்த்தகம் சம்பந்தமாக ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டிய அவசியத்தை மலேசியா வற்புறுத்தி வருகிறது. இது சம்பந்தமாக விரைவில் இலங்கைப் பிரதமர் மலேசியாவுக்குச் செல்லவிருப்பதாகவும் தெரியகிறது.

தேயிலை, ரப்பர் மற்றும் விளைபொருள்களிலேயே ஆசிய நாடுகள் பலவற்றின் பொருளாதாரம் பெரிதும் தங்கியிருக்கிறது. இப்பொருள்களின் விற்பனையை மேல்நாடுகள் தமக்குச் சாதகமாக்கி ஆசிய நாடுகளின் பொருளாதாரத்துக்கு தங்களையே நம்பியிருக்கும் நிலையை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன.

தேயிலை, ரப்பர் மற்றும் விளைபொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகள் ஒன்று சேர்ந்து கூட்டாக நடவடிக்கை எடுத்தால் வெளிநாருக்கு அடங்கி வேண்டிய அவசியமேற்படாது.

# 'ஒருஸ்தாபனத்தின் வேலைபற்றி தொழிலாளிக்கே நன்குதெரியும்'

## உப்புக் கூட்டுஸ்தாபன தலைவர் கருத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தொழிற்சங்கங்களுடன பேச்சுவார்த்தைகள் நடாத்துவதன் மூலம் நாம் வேண்டிய குறிக்கோளை அடைய முடியும். அதில் நான் மிகவும் நம்பிக்கை கொண்டவன்" எனறுஅகில இலங்கை உப்பள அதிகாரிகளின் 10-வது வருடாந்தக் கூட்டத்தில்கலந்துகொண்டு உரையாற்றுகையில் தேசிய உப்பு கூட்டுத்தாபன தலைவர் திரு. எம். சிவநாதன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

ஒரு ஸ்தாபனத்தில் வேலை செய்யும் தொழிலாளிக்கே அங்கு நடைபெறும் கடமைகளும் வேலைகளும் நன்கு புரியும். ஆகையால் அவர்களின் ஆலோசனையை நாம் பெற்றால் நன்மையாகவிருக்கும்.

மாவட்டங்களிலுள்ள அதிகாரிகளும் இந்த அடிப்படையில் வேலைகளை மேற்கொண்டால் எமது நோக்கங்களை நாம் இலகுவில் அடையலாம்.

உப்பள உத்தியோகத்தர்களின் பல பிரனைகளை தீர்ப்பதற்கு என்னிடம் பல திட்டங்கள் உண்டு. இவற்றை நாளடைவில் நான் மேற்கொள்ளவிருக்கின்றேன்.

தொழிற்சங்கங்கள் என்னை எப்பொழுதும் சந்தித்துக்கொள்ளலாம். அதுடன் நன்மை பயக்கக் கூடியதும் ஆக்கபூர்வமானதுமான திட்டங்களை நான் வரவேற்கின்றேன்.

உப்பள உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் திரு. கே. இராஜேந்திரா பேசுகையில், தொழிற்சங்கங்கள் சுயநல நோக்கத்திற்கு உபயோகிக்கப்படுவதாகவும், தலைவர்கள் பதவிகளுக்காக போட்டியிடுகின்றனரென்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் தொழிற்சங்கத் துறையில் அனுபவமுதிர்ச்சி பெருதிருந்தபோதிலும் மற்ற சங்கங்களிலும் பார்க்க உயர்ந்தே நிற்கின்ரேம். சில தொழிற்சங்கங்கள் அரசியல்வாதிகளினுல் நடாத்தப்படுகின்றன. இதனுல் தொழிலாளர்கள் பலவிதத்திலும் கஷ்டப்படவேண்டியிருக்கின்றது.

## விசேஷபயிற்சிக்கு லண்டன் செல்கிருர்

யாழ்ப்பாணம், சனி

இரத்மலானை நீர்ப்பாசன இலாகா மூலிகை தொழிற்சாலையில் பொறியியல் வல்லுனராகக் கடமையாற்றும் திரு. இ. உருத்திரன் இம் மாதம் 25-ம் திகதி பொறியியலில் விசேஷ பயிற்சி பெறுவதற்காகக் கொழும்புத்திட்ட உதவியின் கீழ் இங்கிலாந்து செல்கிருர். யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியினதும் கொழும்பு சென் ஜோன்ஸ் கல்லூரியினதும் பழைய மாணவரான இவர் கைதடியைச் சேர்ந்த திரு. அ. இலங்கையரது புதல்வராவர்.

## இன்றைய பலன்

24-9-67
ஞாயிற்றுக்கிழமை
(புரட்டாதி மாதம் 8உ)

நட்சத்திரம் - கார்த்திகை பி.பகல் 2-37 வரை மேல் ரோகிணி.

திதி- பஞ்சமி. பகல் 7-57- வரை மேல் ஷட்டி

சுபநேரம்- 9-03-10-33
ராகுகாலம்- 4-33—6-03

மேஷம்-புத்திரவிருத்தி, பொன் - பொருள்சிறப்பு.

ரிஷபம்-வாகன விருத்தி வாழ்க்கைச் சுகம்.

மிதுனம்-சினம் சீறும், சிந்தனை வேண்டும்.

கடகம்-விளைவு மிகுதி, விரைவில் முன்னேற்றம்

சிம்மம்-அடக்கம் வேண்டும், அபாயமுண்டு.

கன்னி- கிரகோகம், பொருள் விரயம்.

துலாம்- வரவுண்டு, வாழ்வில் வகையுண்டு.

விருச்சிகம்- பிரிவுக்கு இடம், சமசுகம்.

தனுசு-பிதாவழிச்சுகம், பெரியார் நட்பு.

மகரம்- தரத்தில் இறக்கம், தவருன பாதை.

கும்பம்- குடும்ப மகிழ்ச்சி, உரிமை கிடைக்கும்.

மீனம் - தனக்குறைவு, தள்ளாடும் நிலை.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## சோலைவரி கட்டாதவர் மீது சங்கானை பட்டினசபை நடவடிக்கை

சங்கானை, சனி

சங்கானைப் பட்டினசபைக்குச் சேரவேண்டிய 1962 தொடக்கம் 1966-ம் ஆண்டு வரையான சோலைவரி நிலுவைப்பணத்தைச் செலுத்தத் தவறியவர்களின் உடைமைகளை நடுக்கட்டவேண்டுமெனவும், உடைமைகள் இல்லாதவர்களின் ஆதனங்களைப் பகிரங்கமாக ஏலத்தில் விற்கவேண்டும் எனவும் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சங்கானைப் பட்டினசபையின் இறைவரி உத்தியோகஸ்தரின் ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பட்டினசபைத்தலைவர் திரு. சி. க. திருச்சிற்றம்பலம் அதற்கான நடவடிக்கையை எடுக்கும்படி இறைவரி மேற்பார்வையாளர் திரு. ச.குலசூரியனை வேண்டியுள்ளார்.

சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளில் குடியிருப்போரின் பாககி வாடகையையும், சோலைவரிப்பாக்கிப் பணத்தையும் கட்டத்தவறியவர்களின் உடைமைகளையும் பறிமுதல் செய்து ஏலத்தில் விற்கவேண்டும் என்றும் இவர் கேட்கப்பட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து சங்கானைப்பொலிசாரின் உதவியுடன் மேற்படி வேலையைத் துரிதமாகச் செய்வதற்கு இறைவரி உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## முயற்சிக்கு பாராட்டு

அச்சுவேலி, சனி

"இப்பாடசாலை ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் விடாமுயற்சி மிகவும் வரவேற்கத்தக்கது. இப்பாடசாலை மாணவர்களால் கட்டப்பட்ட இக்கட்டிடத்தைப் பார்த்ததும் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இதுவே இவர்களின் விடாமுயற்சிக்கொரு எடுத்துக்காட்டாகும். சிறுவர்கள் சிறு பிராயம் தொட்டு நல்ல சகவாசத்தையும் விடாமுயற்சியையும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்."

அச்சுவேலி பேண்ஹாம் பாடசாலையின் மூன்றுவது விடுதி இல்லத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்துப் பேசும்போது, நல்லொழுக்க விசாரணைச் சிறுவர் பரிபாலன சேவைப்பகுதி முதலாவது உதவி ஆணையாளர் திரு. ஜெ. ஜி. ஏ. செனிவரத்தின இவ்வாறு தெரிவித்தார்.

வடபகுதி பிரதம பாது [illegible]

## கருத்து கோரப்பட்டுள்ளது

காங்கேசன்துறை, சனி

வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி பிரிவை வலிகாமம் வடக்கு, வலிகாமம தெற்கு ஆகிய இருபிரிவுகளாகப் பிரிப்பதற்கு அவ்வப்பகுதி உள்ளூராட்சிமன்றங்களுக்கு எல்லைப் பிரிவுகளைக் காட்டி ஒரு படமொன்றை யாழ். அரசாங்க அதிபர் அனுப்பி வைத்துள்ளார்.

இப்படத்தின்படி வலிகாமம்வடக்கு எல்லைக்குள்காங்கேசன்துறை பட்டினசபை மயிலிட்டிக் கிராமசபை, தெல்லிப்பழைக் கிராம சபை ஆகியன அடங்கியுள்ளதாகவும் வலிகாமம் தெற்கு எல்லைக்குள் மல்லாகம் கிராமசபை, சுன்னுகம் பட்டினசபை, உடுவில்கிராம சபை ஆகியவை அடங்கியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வெல்லைகள் பிரிக்கப்படுவதில்திருத்தங்கள் இருந்தால் உள்ளூராட்சிமன்றங்கள் தங்கள் கருத்தை வெளியிடுமாறு கோரப்பட்டுள்ளது.

## நாடும் நடப்பும்

அமெரிக்காவில் இனப் பிரச்னை இன்னும் மறையவில்லை. சில வாரங்களுக்கு முன் அங்குபெரும் கலகம் நிகழ்ந்தது. பல உயிர்கள் பலியாகின. கட்டிடங்கள், வாகனங்களுக்குத் தீவைக்கப்பட்டது. கொள்ளை, கொலை, தீவைப்பு என பல கோர சம்பவங்கள் நிகழ்ந்தன.

அமெரிக்க மக்கள் மட்டும் கவலைப்படவில்லை, முன்னேற்றமடைந்துள்ள அமெரிக்காவிலுமா இப்படி நடக்கிறது என உலக மக்கள் பலரும் வருத்தம் தெரிவித்தனர்.

பலாத்காரச் செயல்களினுல் எதுவித நன்மையும் கிடைக்காதென்றும் இனப்பிரச்னைக்கு அமைதியான முறையிலேயே தீர்வுகாணப்படவேண்டுமென்றும் அமெரிக்கத் லைவர்கள் வேண்டுகோள்விடுத்தனர். நீக்ரோ மக்கள் தங்கள் உரிமைகளை அமைதியான வழிகளினுல் பெறமுடியுமென்று நீக்ரோ தலைவர்கள் கூறினர்.

இனக்கலவரம் காரணமாக அமெரிக்காவில் நீக்ரோ மக்களின் நிலைமோசமாகிவிடுமே என்றும் சிலர் கவலைகொண்டனர்.

இப்போது கிடைத்துள்ள செய்தி இவையெல்லாவற்றையும் தூக்கிஎறிந்துவிட்டது

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் டீன்றஸ்க் தமது ஒரே மகளை, அவள்விருப்பப்படி அவள் காதலித்த நீக்ரோ இளைஞனுக்கு மனமகிழ்ச்சியோடு மணம்முடித்துக் கொடுத்திருக்கிருர்.

இங்கு சாதிப்பாகுபாடு நீங்கவேண்டுமென்றும் அதற்குப் பல வழிகள் உண்டு என்றும் மேடைகளில் வெளுத்து வாங்குவோரும், பத்திரிகைகளில் எழுதுவோரும் செயலில் எதையும் செய்வார்களா?

டீன்றஸ்கும் அவர் மகளும்செய்துள்ள 'புரட்சி'யை இங்கு 'புரட்சி' பற்றிக் கூறுவோர் செயலில் செய்தால் பிரச்னை எவ்வளவு அமைதியாகத் தீர்ந்துவிடும்.

—ஊர்சுற்றி

## சைவ மகாநாடு

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் நான்காவது சைவமகாநாடு கைதடி மூர்த்தியாவத்தைக் கந்தசுவாமி கோவில் வீதியிலுள்ள சங்க பிரார்த்தனை மண்டபத்தில்இன்று ஆரம்பமாகின்றது.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இன்றைய விழாவின் நிகழ்ச்சிகள்:-

மாலை 6 மணி: தலைமையுரை: காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளை, மகாநாட்டுத்திறப்புரை: சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள். சொற்பொழிவுகள்: பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, முதலியார் செ. முத்துத்தம்பி முதலியார் செ. சின்னத்தம்பி, நாதஸ்வரக்கச்சேரி: திரு. தங்கவேலு குழுவினர் நடனம் திருமதி சிவசுந்தரத்தின் மாணவிகளும் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாசாலை மாணவர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் பிரமுகர் கோரக் கொலை

திண்டுக்கல், செப். 23

ஒட்டன் சத்திரத்தைச் சேர்ந்த பிரபல மிராசுதாரும், காங்கிரஸ்காரருமான திரு. பசுங்கிளித்தேவர் நேற்று முன்தினமிரவு கோரமாகக் கொலை செய்யப்பட்டார்.

தேவரின் முகத்தில் 8 காயங்களும், கைகளிலும் தொடையிலும் வெட்டுக் காயங்களும இருந்தனவாம்.

தகவல் கிடைத்ததும், ஒட்டன்சத்திரம் சப்இன்ஸ்பெக்டர் ஸ்தலத்துக்கு விரைந்து சடலத்தைக் கைப்பற்றி அரசினர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார்.

### மோப்பு நாய்கள்

துப்புத் துலக்க, பொலிஸ் மோப்பு நாய்களான ஷீலா, யுவராணி இரண்டும் மதுரையிலிருந்து வந்துள்ளன.

திரு. தேவர், கடை வீதியிலிருந்து பஸ் நிலையத்துக்துப் பின்புறமுள்ள சந்துவழியாக வீட்டுக்கு வந்துகொண்டிருக்கையில், யாரோ சிலர் அவர் மீது பாய்ந்து, அரிவாளால் வெட்டி, வேல்கம்பால் குத்தியதாகக் கூறப்படுகிறது. திரு. தேவர், அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

திரு. தேவருக்கு வயது 65. இருமனைவியர், இரண்டு பிள்ளைகள். நான்கு பெண்கள் உள்ளனர்.

# போலிக் கம்பெனி நடத்தி ரூ. 17 ஆயிரம் மோசடி

## சந்தேக நபர் தலைமறைவு

கோவை, செப். 23

வேலை தருவதாகக் கூறி, அநேக இளைஞர்களை ரூபா 17 ஆயிரம் வரை மோசடி செய்ததாகக் கூறப்படும் போலி கம்பெனி ஒன்றைக் கோவை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

எஸ். ராஜா என்ற நபர் மீது மோசடி செய்ததாக வழக்கு ஒன்றைப் பொலிசார் பதிவுசெய்திருக்கின்றனர். கோவை ஆர். எஸ். புரத்தில் 'சர்வதேச சங்கம், ஏஜென்ஸி' என்ற பெயரில் கம்பெனி ஆரம்பித்தவர் ராஜா.

இந்தக் கம்பெனியின் பெயரில் உள்ளூர் தினப் பத்திரிகைகளில் ராஜா, விளம்பரங்கள் கொடுப்பதுண்டு என்று சொல்லப்படுகிறது. தமது கம்பெனியில் கிளை மனேஜர்கள், விற்பனையாளர், தட்டெழுத்தாளர், கிளார்க்மார், பில் சேகரிப்பவர்கள் போன்ற பல்வேறு உத்தியோகங்களுக்கு இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி விளம்பரம் கொடுத்திருந்தாராம்.

### பிணைப் பணம்

ஒவ்வொரு விண்ணப்பதாரரும், விண்ணப்பத்துடன் ரூபா 1 அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுவர், விண்ணப்பத்தாரர்கள் பேட்டிக்கு அழைக்கப்படுவர். ரூபா 200லிருந்து ஆயிரம் ரூபாய் வரை பிணைப்பணம் கோரப்படும். வேலை தருவதற்கு இது ஒரு நிபந்தனை. விண்ணப்பக் கட்டணமாகவும், பிணைப்பணத்தொகையாகவும் ரூபா 17 ஆயிரத்துக்கதிகமாக எதிரி பணம் வசூலித்ததாகச் சொல்லப்படுகிறது.

### விளம்பரம்

'மாலா பார் சோப்பு, மாலா சீயக்காய் பவுடர், மாலா வெண்ணை, மாலா நெய், அப்பளம்' போன்ற தயாரிப்புகளுக்கு ஏஜெண்டுகள் தேவை என்று கோரிப் பத்திரிகைகளில் பிரஸ்தாப கம்பெனி விளம்பரங்கள் கொடுத்திருந்தது. ஆனால், உண்மையில் இக் கம்பெனி இந்தப் பண்டங்கள் எதையு தயாரிக்கவில்லையென்று சொல்லப்படுகிறது இக் கம்பெனியில், 6 பெண்கள் உட்பட 42 நபர்களுக்கு வேலை தரப்பட்டிருந்தது. ஒரு பெண், ஜெனரல் மனேஜராக நியமிக்கப்பட்டிருந்தார். மற்றொருவர், கம்பெனி உரிமையாளரின் அந்தரங்கக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

### தலைமறைவு

உரிமையாளர் இவ்வாறு ஏமாற்றி வசூலித்த பணத்துடன் தலைமறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

# 'நாத்திகம்' ஆசிரியருக்கு ரூ. 1000 அபராதம்

திருச்சி, செப். 23

திருச்சி மாவட்ட தி. மு. க. காரியதரிசி திரு. அன்பில் தர்மலிங்கத்தைப் பற்றி அவதூறாக எழுதியதாக 'நாத்திகம்' என்ற வாரப்பத்திரிகையின் ஆசிரியர் திரு. ராமசாமி என்பவர் மீது நடந்த ஒரு வழக்கில் எதிரிக்கு திருச்சி மாவட்ட நீதவான் திரு. டி. என். சிங்காரவேலு ரூ. 1000 அபராதம் விதித்தார். அபராதத் தொகையைக் கட்டத்தவறினால் 6 மாத காலம் சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்க நீதவான் உத்தரவிட்டார்.

எதிரியின் வேண்டுகோளின் பேரில் அக்டோபர் 5-ந்திகதி வரை அபராதத் தொகையைச் செலுத்த அவகாசம் அளிக்கப்பட்டது.

## மாப்பிள்ளைதேடி எல்லை கடந்தார்கள்

ஜம்மு, செப். 23

பாகிஸ்தானிலுள்ள சியால்காட் எனுமிடத்தைச் சேர்ந்த ஐந்து இந்துக்கள் தமது வளர்ந்த பெண்களுக்கு மாப்பிள்ளைகள் தேடி சென்ற வார இறுதியின் போது இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழையும்போது இந்திய எல்லைக் காவல்வீரர்களால் கைதுசெய்யப்பட்டார்கள்.

தகுதிவாய்ந்த மாப்பிள்ளைகள் இல்லாததாலேயே தாம் இவ்வித எல்லைமீறி வரவேண்டி நேரிட்டதாக இந்த ஐவரும் காவல்வீரர்களுக்கு தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 12 கிராமங்களில் நீர் வசதி

உடுப்பிட்டி, சனி

நாடு பூராவிலும் தண்ணீரின்றி அவதியுறும் பன்னிரண்டு கிராமங்களில் பல லட்ச ரூபா செலவில் புதிய குழாய் நீர்த்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் நாஸரின் விசேஷ ஆலோசகர்

கராச்சி, செப். 23

ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸரின் விசேஷ வெளிவிவகார ஆலோசகரான டாக்டர் மஹமது பாஸி, தற்போது பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ளார்.

அவர், பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானுடன் 'இதமான, பயனுள்ள' பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகக் கூறப்பட்டது.

ஐ. அ. கு.வும் பாகிஸ்தானும் ஒன்றோடொன்று இப்போது நெருங்கியதொடர்பு கொண்டுவருவதாகவும தமது நாடு, பாகிஸ்தானுடன் தனது உறவுகளை விஸ்தரிக்க விரும்புவதாகவும் டாக்டர் பாஸி கூறினார்.

### மன்னர் ஹுசெயின்

இதற்கிடையில், ராவல்பிண்டியில் ஜனாதிபதி அயூப்கானுக்கும், ஜோர்தான் மன்னர் ஹுசெயினுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

## கள்ளக் கடத்தல் பொருள் சிக்கியது

### ரூ. 8 1/2 லட்சம் பெறுமதி

பம்பாய், செப். 23

சுமார் ரூ. 8 லட்சம் பெறுமதியுள்ள ஆடம்பரப் பொருள்களும், ரூ 40,000 பெறுமதியுள்ள ஒரு லொறியும் சென்ற புதன் இரவு ஷிர்கான் கிராமத்தில் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன. இந்தப் பொருட்கள் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டவை என்று சொல்லப்படுகிறது

இப்பொருட்கள் ஒரு நாட்டுப் படகில் கொண்டுவரப்பட்டன என்றும், லொறியில் ஏற்றப்படுகையில் பறிமுதல் செய்யப்பட்டன என்றும் அதிகாரபூர்வமாகக் கூறப்பட்டது.

# வார்னிஷ் விற்பனையை ஆராய கமிட்டி நியமிக்கப்பட்டது

திருச்சி, செப். 23

வார்னிஷ், ஸ்பிரிட் உற்பத்தி, விற்பனைக்கு லைசென்ஸ் வழங்குவதை ஆராயவும் அவற்றின் மொத்த, சில்லறை விற்பனையை நன்கு கட்டுப்படுத்தவும் அரசாங்கத்துக்கு வழிகாட்டும்வகையில் ஒரு கொள்கையை உருவாக்கவும் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலும் செங்கல்பட்டிலும் சமீபத்தில் ஏற்பட்ட வார்னிஷ் மரணங்களுக்கு அந்த வார்னிஷில் மெதில் அல்கஹோல் சேர்ந்திருந்ததே காரணம் என்று வைத்தியநிபுணர்கள் நடத்திய பூர்வாங்க விசாரணையில் தெரியவந்துள்ளது.

### கண்டிப்பான நடவடிக்கைகள்

வார்னிஷ் தயாரிப்புக்கு மெதில் அல்கஹோல் அனுமதிக்கப்பட்டதல்ல. எனவே அனுமதிக்கப்பட்ட பண்டங்களைக் கொண்டே அவற்றைத் தயாரிக்குமாறுசெய்யக் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமாறு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

வார்னிஷ் உற்பத்திசெய்யப்படுமிடங்கள், மொத்த சில்லறை விற்பனைநிலையங்கள் ஆகியவற்றை அதிகாரிகள் அடிக்கடி பரிசோதனை செய்வதுடன் சாம்பிள்களை எடுத்துப்பார்க்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

## தண்ணீர் குடித்து தற்கொலை

பாரிஸ், செப். 23

பிரான்சிலுள்ள லா-ரோச்சர்-யான் என்னுமிடத்தில் தண்ணீரைக் குடித்துத் தற்கொலைசெய்துகொண்ட சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது. படித்துப் பட்டம் பெற்ற, 37 வயது நிரம்பிய பிரஞ்சுப் பெண் ஒருவர் தம்ளர் தம்ளராக 3.3 கலன் தண்ணீரைக் குடித்துத் தற்கொலை செய்துகொண்டதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

தண்ணீரை அளவுக்கு அதிகமாகக் குடிக்கச்செய்து சித்திரவதைக்கு உள்ளாக்கும் கொடுமை முன்னர் பிரான்சில் நிலவி வந்ததாக டாக்டர் ஒருவர் பொலிஸ்கோர்ட்டில் தெரிவித்தார்.

''வயிறு நிரம்பும்வரை மக்களைப் பலவந்தமாகத் தண்ணீர் குடிக்கச் செய்வர். தொண்டைக்குள் செல்லும் தண்ணீர், சுவாசப்பையில் வழிந்துபோகும். இதனால் நெஞ்சு அடைத்து, தாங்கொணாத வலி ஏற்படும்'' என்று டாக்டர் குறிப்பிட்டார்.

## டாக்டர் இடமாற்றம்

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் வைத்தியசாலைக்கு டாக்டர் திரு. எஸ் திருநாவுக்கரசு யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையிலிருந்து அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்படவிருக்கிறார்.

## இலவச 'எக்ஸ்றே'

வல்வெட்டித்துறை, சனி

இம்மாதம் 28-ந் திகதி தொடக்கம் 30-ந் திகதி வரை தொண்டமானாறு சுகாதாரப் பகுதிகளான செல்வச்சந்நிதி, சின்னக் கடற்கரை லேன், கெருடாவில் ஆகிய இடங்களில் உள்ள மக்களுக்கு அவ்வவ்விடங்களில் வைத்து இலவசமாக 'எக்ஸ்றே' படப்பிடிப்பு நடைபெறவிருக்கிறது. பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

# சீன-இந்திய பேச்சுவார்த்தைகள் இப்போது சாத்தியமில்லை

## திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறுகிறார்

கல்கத்தா, செப். 23

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே உள்ள எல்லைத்தகராறுகளைத் தீர்ப்பதற்காக சீனாவுடன் இப்போதுள்ள நிலைமையில்பேச்சுவார்த்தைகள் நடத்துவது சாத்தியமில்லை எனத் தாம் நம்புவதாக திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் இங்கு நிருபர்களிடம் கூறினார்.

எமது ராஜதந்திரிகளைக் கம்யூனிஸ்ட் சீனா நடத்திய விதத்திற்குப் பிறகு, இப்பாது ராஜதந்திர ரீதியில் அவர்களை அணுகுவது என்பது சாத்தியமில்லை.

### 'இதுசமயமில்லை'

இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளுடனும் நேசபாவமாக உள்ள நாடுகள் மூலம் இதற்கு முயற்சி செய்வதும் சாத்தியமில்லையென்றே நினைக்கிறேன்.

அதற்கும் ஒரு காலம் வரக்கூடும். ஆனால், அதற்கு இது சமயமில்லை என்று திரு. ஜெயப்பிரகாஷ் கூறினார்.

## தி. மு. க. — காங்கிரஸ் மோதல்

### 40 பேர் கைது

சென்னை, செப். 23

கடந்த திங்கட்கிழமையன்று எண்ணூருக்கருகே தி. மு. க. — காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்புகள் சம்பந்தமாக இதுவரை 40 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாக [illegible] பொலிஸ் சுப்ரிண்டெண்ட் தெரிவித்துள்ளார். அப்பகுதியில் பலத்த பொலிஸ் பந்தோபஸ்து போடப்பட்டிருக்கிறது. நிலைமை இப்போது அமைதியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலால் முடியாதது கலையினால் முடியும்

## முன்னாள் நீதிபதி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''வடக்கு-கிழக்கு, மலைநாடு ஆகிய பரந்துபட்ட தமிழர்கள் ஒன்று சேர்ந்து தம்மைத் தாம் அறிந்து கொள்ளக்கூடியதாக பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்து ஒற்றுமையை வலுப்படுத்தக்கூடியதாக நாடக விழாக்களோ, கலைவிழாக்களோ அமைகின்றன. அரசியலால் ஒன்றுபடுத்த முடியாத ஒரு சிறந்த பண்பை கலைகள் கொண்டுள்ளன. இத்தகைய கலைவிழாக்கள் நாட்டின் பல பிராந்தியங்களிலும் நிகழுமானால் நம்மிடம் நிச்சயம் சிறப்பைப் பெறும்.''

இவ்வாறு வியாழக்கிழமை மாலை யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற பாடசாலைகள் நாடகவிழாவை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்த ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. தம்பித்துரை பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

இன்று நாட்டில் நாடகக் கலையானது மக்களிடத்தே அதி தீவிரமாக வளர்ச்சியுற்று இலங்குகின்றது. இப்படியான போட்டிகள் மூலம் நாடகக்கலையின் தரமும் பண்பும் உயர்ந்து சிறக்கக்கூடிய நிலை ஏற்படும்.

இலங்கைக் கலைக்கழகத் தலைவரான சு. வித்தியானந்தன் பேசும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

கலையம்சம் மிகுந்த துறையாக நாடகக்கலை வளரவும், முன்னைய சிறப்புகளுடன் இலங்கவும் கூடியதாக நாடகம் அமையவேண்டும் என்பதை அடித்தளமாகக் கொண்டே இலங்கைக் கலைக்கழகம் நாடகக் கலையை வளர்க்க முற்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் எம்மால் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் இத்துறையில் படிப்படியாக வளர்ச்சி பெற்று வருவதைக் காண்கின்றோம்.

விளையாட்டுப் போட்டிகளுக்குப் புள்ளிகள் கொடுத்தும் பரிசு வழங்கியும் ஊக்குவிப்பது போல நாடகக்கலையிலும், இசைக்கலையிலும் பங்குபற்றும் மாணவர்களை ஊக்குவித்து வருவோமானால் இந்த மேலான கலைகள் வளர வழிபிறக்கும்.

சிங்களப்பகுதிகளில் இத்தகைய ஆர்வம், செயலாக்கம் பெறக்கூடிய தான சூழ்நிலைகள் உருவாகி வருவதாக அறிகின்றோம். அதுபோல தமிழ்ப் பகுதிகளிலும் இத்தகைய முன்னேற்றத்தைக் காணக் கூடிய வகையில் நம்பகுதிக் கலைப் பகுதியினர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். [நி]

## வருடாந்தபாசறை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்ட சாரணர் சங்க வருடாந்த பாசறையும், விழாக் காட்சிகளும் இம்மாதம் 25-ம் திகதி யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நடைபெறவிருக்கின்றது. மாலை மூன்று மணி தொடக்கம் நடைபெறும் இவ்விழாவில் சாரணர்கள் அளிக்கும் ''பாசறைத் தீ'' என்னும் நாடகம் நடைபெறும். மேற்படி சங்கத் தலைவரும் வடபகுதிஅசைஸ் அதிபருமான திரு. வேணன் அபயசேகரா இவ்வைபவத்துக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். [ந. நி.]

## உதவி

அச்சுவேலி, சனி

''அரசாங்கத்தின் உதவியுடனும் உற்சாகத்துடனும் விடாமுயற்சியோடும் பொருளாதாரத்தைப் பெருக்க நாம் முன் வரவேண்டும். ஆனால் அரசாங்கத்தின் பூரண உதவியை நாம் எதிர் பார்க்கக் கூடாது'' என அச்சுவேலி றோமன் கத்தோலிக்க பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ஆ. சி. கிறிஸ்தோத்திரம் பிரஸ்தாப பாடசாலையில் நீர்ப்பாய்ச்சல் வேலையை ஆரம்பித்து வைத்து மாணவர் முன் குறிப்பிட்டார்.

தாளையடி, சனி

யாழ்ப்பாணப் பகுதியில் நடைபெற்று வரும் சிறகு வலைக் களவுகளையும் டைனமைட் வெடி போட்டு மீன் பிடிப்பதையும் தடுக்குமுகமாகதாளையடியில் கடற்றொழில்பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. பொ. இராமநாதன் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்படவிருக்கிறார். இவரது இடத்துக்கு திரு. செ. செந்தில்வேல் நியமிக்கப்பட்டிருக்கிறார்.


1. யானை மார்க் நம்பர் 1 சிமெனஸ்

ஒடிகொலோன் சிசு பரிபாலிப்புக்கும், நோயாளிகள் அறைக்கும், குளிக்கும் அறைக்கும்.

மறவாதீர்—சிமென்ஸ்.

2. சிமென்ஸ்— வாசனை செவ்விளநீர் தேங்காய் எண்ணெய், ஆமணக்கெண்ணை கூந்தல் வளர்க்கும் தைலமும் உங்கள் உரோமத்தை செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கும்.

3. சிமென்ஸ் புத்தராஜா தைலம்

தலையிடியை ஒரு நிமிடத்தில் நிறுத்திவிடும். எல்லாவிதமான தலையிடிகளுக்கும் பீநீசம் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்த ஒளஷதம்.

இலங்கையிலுள்ள சகல பிரசித்திபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.


# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 24-9-67

[செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி. 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல் வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை. 2-00 தேர்த்திருவிழா அஞ்சலி.

மாலை 5-00 பிறந்தநில வாழ்த்துக்கள், 5-30 எங்கள் அதிதி

இரவு 6-15 நாடோடிப் பாடல்கள் — திரு. என். சிவசண்முகமூர்த்தி, 6-45 கிறிஸ்தவஆராதனை, 7-15 பாட்டு — எஸ். சண்முகராகவன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 மாதர்மேட்டவை.


## 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.

அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.




உங்களுடைய அடுத்த பெரிய சுவீப்புகளில்

முதல் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு அவர்களின் பரிசுத் தொகையிலிருந்து கீழ்க்காணும் கார்களை வாங்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

சீட்டிழுப்பு இல. 161. தேதி 28-9-67 — புத்தம் புதிய மொரிஸ் மைனர் கார் ரூ. 10,000/-*



சீட்டிழுப்பு இல. 161.

சீட்டிழுப்பு இல. 162. தேதி 5-10-67 — புத்தம் புதிய ஒப்பல் கடெற் கார் ரூ. 14,425/-*



சீட்டிழுப்பு இல. 162

* இவை தீர்வை உள்ளடங்கிய சாதாரண கம்பெனிப்பட்டியல் விலைகளாகும்.

இந்த கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப்பின் 14 நாள்களுக்கு மட்டும்வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### சங்கானைப்பட்டினசபை
### கேள்விப்பத்திர விளம்பரம்

1967ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12-ம் திகதி காலை 10-00 மணிவரை கீழே சொல்லப்பட்ட வேலைகளுக்கான சீல் வைத்த கேள்விகள் என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 5/-ம் கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 50/-ம் கட்டியதன்பேரில் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்களிலேயே கேள்விகள் கேட்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரப்பணம் ரூபா 5/- திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. 10-10-67ம் திகதி காலை 10-00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மேற்கொண்டு விபரங்களை வேலைநேரங்களில் சங்கானைப் பட்டினசபைக்காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

வேலைகள்

1. சங்கானைப் பட்டினசபைக் காரியாலயத்திற்குப் புதிய கிணறு கட்டுதல்.
2. சேச் ரோட்டிற்கு இரண்டாம் முறை தார் ஊற்றல்.
3. பஸ் தரிப்பு நிலையத்திற்கு இரண்டாம்முறை தார் ஊற்றல்.

(ஒப்பம்)

சி. க. திருச்சிற்றம்பலம்,
தலைவர்,
பட்டின சபை சங்கானை,
பட்டினசபைக் காரியாலயம்
சங்கானை, 22-9-1967. 260

### சங்கானைப் பட்டினசபை
### கேள்விப்பத்திர விளம்பரம்

சேரி ஒழிப்புத் திட்டத்தின்கீழ் நான்கு வீடுகள் கட்டுவதற்கான சீல்வைத்த கேள்விகள் பொதுமராமத்து பகுதியினருடன் ரூபா 20,000/க்கு மேல் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களிடமிருந்து 12-10-67ம் திகதி காலை 10-00 மணிவரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 10/-கேள்விப்பத்திர வைப்புப்பணமாக ரூபா 50/-ம் கட்டியதன்பேரில் வழங்கப்படும் கேள்விப்பத்திரங்களிலேயே கேள்விகள் கேட்கப்படவேண்டும். கேள்விப்பத்திரப்பணம் ரூபா 10-திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது 10-10-67-ம் திகதி காலை 10 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மேற்கொண்ட விபரங்களை வேலை நேரங்களில் சங்கானைப் பட்டினசபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்)

சி. க. திருச்சிற்றம்பலம்
தலைவர்
பட்டினசபை, சங்கானை,
பட்டினசபைக்காரியாலயம்
சங்கானை. 22-9-67. 261

## வரி விளம்பரம்

### தேவை

கசியர், டிஸ்பென்சர்:

யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் ஆங்கில வைத்திய சாலைக்கு பிணைப்பணம் செலுத்தக்கூடிய கசியர், டிஸ்பென்சர் தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். இருபாலாருடைய விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். விளம்பர இல 2385, ஈழநாடு மே/பா த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2385

தேநீர்க் கடை நடத்த அனுபவமுள்ளவர் உடன் தேவை. குடும்பத்துடன் இருக்க வசதியுண்டு. சம்பளம் 150/- மாதம். பிணைப் பணம் கட்ட வசதியுள்ளவர் மாத்திரம் விண்ணப்பிக்கவும். சி. ம. கணபதிப்பிள்ளையை அல்லைப்பிட்டியில் நேரில் சந்திக்கவும். 2388

### விற்பனைக்கு

தென்னந்தோட்டம்:

வெட்டுக்காடு என்ற இடத்தில் உள்ள ''கிளக்கன்தோட்டம்'' என்றழைக்கப்படும் நிறைய மரங்கள் உள்ள 15 ஏக்கர் தென்னந்தோட்டம்விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு திருமதி எஸ். பாலசுப்பிரமணியம், 42, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 2386

### ஞாபகார்த்தம்

திரு. சமியேல் யோண் 1-ம் வருட மரண ஞாபகம். பிறப்பு 4-6-1892 இறப்பு 23-9-1966. நித்திய பிதாவே யேசுவின் திருப்பாடுகளின் பெறுபேறுகளை பார்த்து மரித்த உமது தாசனுகிய சமியேல் யோண் உடைய ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும். இவர் நினைவால் துயருறும், மனைவியும் பிள்ளைகளும். 2387

தனியார்துறை

## நெசவாளர் சங்க ஆரம்பக் கூட்டம்

வேலணை, சனி

தனியார்துறை நெசவாளர் சங்க ஆரம்பக் கூட்டம் இம்மாதம் 25-ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

நூல் பெறுவதில் உள்ள கஷ்டம், சம்பளம் நிதானப்படுத்துதல், விற்பனவு வசதி போன்ற முக்கிய விஷயங்களைப் பற்றி இக்கூட்டத்தில் ஆலோசிக்கப் படவிருக்கிறதாம்.

## சாட்டி திருநாள்

நாரந்தனை, சனி

வேலணை சாட்டிசிந்தாத்திரை மாதா கோவில் திருநாள் சென்றகிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 25-ம் திகதி இரவு பெரிய பாடல்பூசையும், சுற்றுப்பிரகாரமும் நடைபெறும்.






## கரபந்தாட்ட வீரர் விபத்தில் மரணம்

வல்வெட்டித்துறை, சனி

கல்ஓயா அபிவிருத்திச் சபையில் உத்தியோகஸ்தராகக் கடமையாற்றிவந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். கதிராமலிங்கம் என்பவர் அம்பாறை என்னுமிடத்தில் சென்று கொண்டிருந்த ஜீப்வண்டி வேறொரு வண்டியுடன் நேற்று மோதியதால் ஸ்தலத்திலேயே மரணமானுர். இரு குழந்தைக்குத் தந்தையான இவர் ஒரு விளையாட்டு வீரருமாவார். இவர் இலங்கை கைப்பந்தாட்டக் குழுவுக்குத் தலைமைதாங்கி வெளிநாடுகள் பலவற்றுக்குச் சென்றுள்ளார்.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி

## பிள்ளையார் கோவில்

பிரம்ம ஸ்ரீ வி. வரதராஜக் குருக்கள் எழுதுவது:

சுந்தரம் பிரதர்ஸ்,
73, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்,

நீங்கள் அனுப்பி வைக்கும் பச்சைச் சந்தனம் சுத்தமானதாகவும் நறுமணமுள்ளதாகவும், தூய்மையாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆனைப்பந்தி பிள்ளையாருக்குச் சந்தனக்காப்புச் சாத்தி பணிந்து அருள் பெறுகிறுர்கள் அடியார்கள். உங்கள் சேவை தொடர்ந்து நடந்துவர வேண்டுமென்று எல்லாம் வல்ல சித்தி விக்னேஸ்வரனை வேண்டுகிறேன்.

இப்படிக்கு

வி. வரதராஜக்குருக்கள்.




அதிக வனப்பும்
எழிலும்
லாவண்ணியமும்
பெற
பொன்ட்ஸ்
வனிஷிங் கிறீம்

உங்கள் சருமத்தின் எண்ணெய்ப் பிசுக்கை அகற்றி, மாசுமறுக்களையும் குளிந்த மயிர்க் கண்களையும் மறைத்து, கரும்புள்ளிகள் உண்டாகாமல் காக்க வல்லது எண்ணெய்ப் பிசுக்கற்ற இதமான பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமத்தைப் பாதுகாத்து, சோபை யூட்டி நாளுக்கு நாள் அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் உடையோராகத் திகழவைப்பது பொண்ட்ஸ்-வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்க பொண்ட்ஸ் வனிஷிங் கிறீமைத் தனியே உபயோகியுங்கள் அல்லது உங்கள் முக ஒப்பனை மணிக்கணக்கில் மலர்ச்சியுடன் இருக்க இதனை ஓர் அஸ்திவாரப் பூச்சாக உபயோகியுங்கள்.




அழகெனும் அணிபுனைந்து சருமத்திற்குச் சோபையூட்ட
பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி உறவில் ஒரே கொள்கை

## பிரதமர் டட்லி சேனநாயகா திருப்தி

கொழும்பு, வெள்ளி
இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் வெளிநாட்டுக் கொள்கையில் ஒருமித்த கருத்து நிலவுவதை பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா அவரைச்சந்தித்த இந்திய பத்திரிகையாளர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

இருநாடுகளும் மண்டல சார்பற்ற கொள்கையில் நம்பிக்கை கொண்டிருப்பதை பிரதமர் சுட்டிக்காட்டியிருப்பதுடன் இக் கொள்கையின் சிறப்பையும் வலியுறுத்தியுள்ளார்.

தேயிலை விற்பனையில் இரு நாடுகளுக்குமிடையில் ஒத்துழைப்பு ஏற்படவேண்டும் என்று திரு. சேனநாயகா தெரிவித்தார்.

இரண்டு சீனக்கிளைகளை இலங்கை அங்கீகரிப்பதாக சீனகுற்றஞ்சாட்டியிருப்பதை பிரதமர் சேனநாயகா நிருபர்களிடம்மறுத்து சீனவின் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது என்று தெரிவித்துள்ளார்

இந்தியப் பிரதமர் தம்மை இந்தியாவுக்கு விஜயம்செய்யும்படி விடுத்த அழைப்பை தாம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.


நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி - பத்மினி
நடித்த
வஞ்சிக் கோட்டை வாலிபன்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 6-30 9-45
போயாதினங்களில்3 காட்சி
லாலாஜ்
LALACH
[ Hindi Thriller ]

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily at 4-45. 7-00 & 9-45
PSYCHO


# தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி
நேற்று மகியாங்கனையில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 160-வது சுவீப் முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன. லொத்தர்சபையால்வெளியிடப்பட்ட இந்த சுவீப் முடிவுகள் தெளிவில்லாமல் இருப்பதால் இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**1-வது பரிசு**
16 B 0820 ரூ. 100,000

**2-வது பரிசு**
06 J 0890 ரூ. 40,000

**3-வது பரிசு**
51 J 0924 ரூ. 10,000

ரூபா 1447—20 சதம் பெறும் 100 டிக்கட்டுகள்.

| | |
|---|---|
| 40 V 0301 | 53 Z 0240 |
| 48 E 0807 | 19 L 0798 |
| 19 V 0842 | 50 C 0390 |
| 24 E 0276 | 13 D 0331 |
| 45 G 0832 | 11 E 0215 |
| 13 N 0975 | 19 R 0587 |
| 10 U 0284 | 02 X 0844 |
| 14 O 0552 | 23 G 0364 |
| 11 X 0936 | 54 R 0429 |
| 55 A 0343 | 22 L 0739 |
| 19 R 0449 | |
| 49 P 0376 | 58 Y 0110 |
| 11 F 0173 | 17 R 0935 |
| 17 V 0466 | 16 O 0654 |
| 15 O 0778 | 45 B 0062 |
| 12 G 0321 [அல்லது 0821] | |
| 12 R 0586 | 53 E 0840 |
| 18 H 0244 | 33 D 0348 |
| 53 N 0595 | 57 W 0777 |
| 35 O 0385 | 38 K 0278 |
| 38 Q 0865 | 59 C 0077 |
| 43 B 0808 [அல்லது 0806] | |
| 54 X 0985 | 37 N 0410 |
| 59 M 0060 [அல்லது 0065] | |
| 49 A 0487 | 02 G 0835 |
| 21 S 0192 | 02 K 0212 |
| 13 O 0717 | 51 Q 0317 |
| 04 W 0602 | 13 M 0301 |
| 50 Z 0706 | 49 R 0930 |
| 20 P 0719 | |
| 07 X 0156 | 41 P 0224 |
| 35 K 0663 | 13 C 0261 |
| 58 L 0521 | 43 V 0376 |
| 25 U 0117 | 51 X 0747 |
| 32 H 0479 | 51 Y 0822 |
| 01 Z 0856 | 39 P 0733 |
| 30 P 0885 | 11 F 0675 |
| 51 L 0804 | 06 F 0444 |
| 05 H 0046 | 35 S 0931 |
| 10 U 0835 | 23 H 0906 |
| 32 H 0309 | 51 Q 0219 |
| 15 T 0627 | 09 J 0953 |
| 22 G 0945 | 31 M 0442 |
| 17 H 0225 | |
| 39 L 0830 [அல்லது 0930] | |
| 42 C 0230 | 22 Z 0427 |
| 37 Z 0564 | 29 D 0534 |
| 18 V 0403 | 54 D 0002 |
| 57 D 0140 | 44 L 0500 |
| 04 N 0175 | 19 S 0176 |
| 29 T 0245 | 25 C 0177 |
| 53 G 0901 | 42 A 0901 |
| 55 B 0599 | 55 X 0971 |
| 49 H 0962 | |

## எதிரிகள் விடுதலை

வல்வெட்டித்துறை, சனி
பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த விசுவலிங்கம், முருகேசு, அன்னலிங்கம் ஆகிய மூவரும் அதே இடத்தைச் சேர்ந்த வே. முத்துக்குமாரு என்பவருடைய வீட்டுக்குத் தீவைத்துச் சேதப்படுத்தியதாகப் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சார்ஜன்ட் திரு. ஏ. பெரேரா மு. சின்னக்கிளி ஆகியோர் சாட்சியமளித்தபின் மாஜிஸ்திரேட்எதிரிகள் மூவரையும் சுற்றவாளிகளாகக்கண்டு விடுதலை செய்தார்.


REGAL JAFFNA
Time 4-45 7-00 p. m.
9-45 p. m.
Stuart Whitman
Wende Wagner
in
20th Century Fox's
RIO CONCHOS
Cinemascope


'உதவி பொலிஸ் அதிகாரி

# தன்னைப் பலாத்காரம் செய்ததாக எனது மகள் சொன்னர்'

## வவனியா பலாத்கார வழக்கில் சாட்சியம்

வவனியா, சனி
'வவனியா உதவிபொலிஸ் அதிகாரி பெரேரா பொலிஸ் வாகனத்தில் ஏற்றிச்சென்று தன்னை பலாத்காரம் செய்ததாக எனது மகள் பார்வதி என்னிடம் கூறினர்.' என வவனியா பலாத்கார வழக்கில் சாட்சியமளித்த நாகலிங்கம் மனைவி தெய்வானை கூறினர். இவ்வழக்கு வவனியா மாஜிஸ்திரேட் திரு. ஆர். பரமகுரு முன்னிலையில் நேற்று நடைபெற்றது

இவ்வழக்கில், வவனியா உதவி பொலிஸ் அதிகாரி பெரேரா 17 வயதான பார்வதியை, பலாத்காரம் செய்தார் என குற்றஞ்செய்யப்பட்டுள்ளது.

தெய்வானை சாட்சியமளிக்கும்போது கூறியதாவது:

எனது மகள் பார்வதியை தோமஸ் என்பவர் பலாத்காரம் செய்ததுபற்றிப் புகார் செய்ய, நானும், பார்வதியும், அவரது கணவரும், வவனியா பொலிஸ் நிலையத்திற்குச் சென்ருேம். அங்கு ஒரு பொலிஸ் ஜீப்பில் எங்களை ஏறும்படி ஒரு கான்ஸ்டபிள் கூறினர். ஜீப் வாடி வீட்டில் போய்நின்றது. எனது வீட்டடியில் என்னை இறங்கும்படி பொலிஸ் அதிகாரி கூறினர் கொஞ்ச நேரத்தால் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. ஜீப்பிலிருந்து எனது மகளை பொலிஸ் அதிகாரி இறக்கிவிட்டார். கணவன் எங்கே என்று கேட்டபோது, தெரியாதென பார்வதி கூறினர். தன்னை பொலிஸ் அதிகாரி பலாத்காரம் செய்ததாக பார்வதி கூறினர்.

அனுராதபுரம் ஏ. எஸ். பி. திரு மகேந்திரன், மன்னர் ஏ. எஸ். பி. திரு பொன்சேகா ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

தண்ணீரூற்று

# பணமோசடி வழக்கு: எதிரிக்கு 9 மாத கடூழியம்

முல்லைத்திவு, சனி
தண்ணீரூற்று பணமோசடி வழக்கில், சின்னப்பு தெட்சணமூர்த்தி என்பவருக்கு ஒன்பது மாத கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ் வழக்கு முல்லைத்திவு நீதிமன்றத்தில் விசேஷ நீதிபதியான அனுராதபுரம் மாவட்ட நீதிபதி திரு. பிரிந்தா ரணசிங்காச முன்னிலையில் கடந்த ஒரு வருடகாலமாக விசாரணைசெய்யப்பட்டபின் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டார்

எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் கே. ஐயாத்துரையின் அனுசரணையுடன் ஆஜரானர். அரசாங்க தரப்பில் இரகசியப்பொலிசாரின் உதவியுடன் புறக்டர் பி. என். றெஜனேல்ட் ஆஜரானர்,

இவ் வழக்கில் சின்னப்பு தெட்சணமூர்த்தி என்பவர் தண்ணீரூற்று பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் மனேஜராக இருந்தபோது, சங்கத்தின் பணமான 1036 ரூபாவை நம்பிக்கைமோசடி செய்ததாகவும், அந்தநேரத்தில் புத்தகங்களில் பொய்க் கணக்கு எழுதியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

நீதிபதி தீர்ப்பளிக்கையில் கூறியதாவது:

நீர் ஓர் இளைஞனக இருக்கிறீர். ஆனல் நீர் செய்திருக்கும் குற்றம் மிகவும் பாரதூரமானது. பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் பணத்தை மோசடிசெய்துள்ளீர். அத்துடன்பொய்க் கணக்குகளையும் எழுதியுள்ளீர். ஆனபடியால் உம் மீது கருணை காட்ட முடியாதிருக்கிறேன்.

முதலாவது குற்றச்சாட்டுக்கு மூன்று மாதக் கடூழியச் சிறைத்தண்டனையையும், இரண்டாவது குற்றச்சாட்டுக்கு ஆறுமாத கடூழியச் சிறைத்தண்டனையையும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். எதிரி அப்பீல் செய்வதாகக் கூறிய போது அதை ஏற்றுக்கொண்ட நீதிபதி ரூபா 1000 பிணை செலுத்திப் போகுமாறு உத்தரவிட்டார்.

## வவனியா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வவுனியாவில் புதிய பஸ் நிலையம் கட்டப்படவேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஓமந்தையில் சந்தை ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் நடைபெறும் என்றும் இதற்கு அரசாங்கத்தின் செலவில் இருந்து தேவையான மரக்கறிவகைகளை முல்லைத்தீவில்இருந்து கொடுக்கவும் கூட்டத்தில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. மாங்குளத்தில் ஒரு விற்பனை நிலையம் வைப்பதற்கும் ஏற்ற ஆயத்தங்கள் செய்வதுபற்றியும் தீர்மானிக்கப்பட்டது.

### புதிய காரியாதிகாரி அலுவலகம்

வவுனியாவில் மேலும் ஓர் புதிய காரியாதிகாரி அலுவலகம் ஆரம்பிப்பதற்கு ஏற்ற இடம்இருப்பதாகவும் இதை ஒட்டுசுட்டானில் வைப்பதற்கு வேண்டிய அங்கீகாரத்தை நிரந்தரக் காரியதரிசியிடம் கோரப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் கூட்டத்தில் தெரிவித்தார்.

---

யாழ்ப்பாணம், சனி
இம்மாதம் 26-ம் திகதி முதல் அக்டோபர் மாதம் 2ந் திகதிவரை இலங்கை முழுவதும் குழந்தைகள் வாரம் கொண்டாடப்படவிருக்கின்றது இதனை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் விழாக்களைநடத்த டாக்டர் டபிள்யூ. சிவகுருநாதன் வேண்டிய ஒழுங்குகளை ஏற்பாடு செய்து வருகின்றார்.

இம்மாதம் 26-ந் திகதி யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் வடபகுதி அரசாங்க அதிபர் தலைமையில் குழந்தைகள்விழா கொண்டாடப்படவிருக்கின்றது. உள்ளூர் உணவுப் பொருட்களாலும், விளைபொருட்களாலும் அலங்கரிக்கப்பட்ட விநோத உடைப்போட்டி இதில் முக்கிய இடம்பெறும். உள்ளூர் உபஉணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கங்கள், அதிக போஷாக்கு உற்பத்தி இயக்கத்தின் ஆதரவுடன் இவ்விழாவில் முக்கிய இடம்பெறுகின்றது.


3-வது வெற்றி வாரம்!
கெபிடல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
விஜிதா [ஹட்டன்] மொடர்ன் [பதுளை] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
புதுமையான கதை! உணர்ச்சிமிக்க வசனம்!
காதிற்கினிய பாடல்கள்!
முழுவதும் ஒரு ஹாஸ்ய விருந்து!
ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், நாகேஷ்,
விஜயலட்சுமி, ரத்னு, மாதவி
நடித்த



நாம் மூவர்
டைரக்ஷன்: ஜம்பு பாடல்கள்: வாலி இசை: என்.எம்.எஸ்.
கடைசி சிலதினங்கள் கிங்ஸ்லி [கொழும்பு]
மற்றும் 5 திரைகளில்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த
அன்பே வா


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org